# தமிழ்நாடு சட்டம் எண் V/1947.

## 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோயிலில் நுழைவதற்கான உரிமை வழங்குதல் சட்டம்.

(1947 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாளன்று தலைமை ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது. முதலில் 1947 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாளன்று புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது.)

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இந்து கோயில்களுக்குள் நுழைவதற்கும், அனைத்து வகுப்பு இந்துக்களும் அங்கு வழிபாடு நடத்துவதற்கும் உரிமை வழங்குவதற்கானதொரு சட்டம்.

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இந்து கோவில்களில் நுழைவதற்கு எதிராக குறித்தசில வகுப்பு இந்துக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவது மாநில அரசின் கொள்கையாக இருப்பதாலும்;

மேலும் இந்து மக்களின் கருத்தின் அழுத்தத்தின்படி, 1939 ஆம் ஆண்டு மெட்ராஸ் கோயிலில் நுழைவதற்கான உரிமை வழங்குதல் மற்றும் இழப்பீட்டுச் சட்டத்தின் (மெட்ராஸ் சட்டம் XXII/1939) வகைமுறைகளின் கீழ், பல கோயில்கள் குறித்தசில வகுப்பு இந்துக்களுக்கு சமீபத்திய மாதங்களில் திறக்கப்பட்டதன் வேகத்தில், மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு இந்து கோயிலிலும் அனைத்து வகுப்பு இந்துக்களுக்கும் திறக்கப்படவேண்டிய நேரம் வந்துவிட்டது என மாநில அரசு மனநிறைவு அடைந்ததாலும்,

மேலும் மாநில அரசு, மேற்கூறிய மாநில அரசின் கொள்கையை முன்கூட்டியே மற்றும் முழுமையாக செயல்படுத்துவதற்குச் சட்டத்தின் வகைமுறைகள் போதுமானதாக இல்லை என்று மாநில அரசு கருதுவதாலும்;
இது, இதன்மூலம் பின்வருமாறு இயற்றப்படுகிறது:–

1. (1) குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.– இந்தச் சட்டம், 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோயிலில் நுழைவதற்கான உரிமை வழங்குதல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இந்தப் பிரிவு உடனடியாக நடைமுறைக்கு வரும்; மேலும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள வகைமுறைகள், மாநில அரசு, புனித ஜார்ஜ் கோட்டை, அரசிதழில் அறிவிக்கை மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வரும்.

2. பொருள் வரையறைகள்.– இந்தச் சட்டத்தில், பொருள் அல்லது தறுவாயில் ஏதேனும் முரணாக இருந்தாலன்றி, –

(1) 'கோயில்' என்பது எந்தப் பெயரால் அறியப்பட்டாலும், (இந்து சமூகம் அல்லது அதன் எந்தப் பிரிவிற்கும்) அர்ப்பணிக்கப்பட்ட, அல்லது நன்மைக்காக அல்லது உரிமையாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொது சமய வழிபாட்டிடம் என்று பொருள்படும், மற்றும் அந்த இடத்துடன் இணைக்கப்பட்ட துணைக் கோயில்கள் மற்றும் மண்டபங்களை உள்ளடக்கும்;

(2) 'வழிபாடு' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின்படி, வழிபாட்டாளர்களில் பெரும்பாலோர் வழங்கக்கூடிய அல்லது பங்கேற்கக்கூடிய மத சேவையைக் குறிக்கிறது.

3. அனைத்து வகுப்பு இந்துக்களும் கோயில்களுக்குள் நுழைந்து வழிபாடு நடத்தும் உரிமை.– (1) எந்தவொரு சட்டம், வழக்கம் அல்லது பயன்பாடு இருந்தபோதிலும், சாதி அல்லது பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு இந்துவும், எந்தவொரு இந்து கோவிலிலும் நுழைந்து, பொதுவாக இந்துக்கள் அல்லது இந்துக்களின் எந்தப் பிரிவினரும், அதே முறையில் மற்றும் அதே அளவிற்கு வழிபட உரிமை உண்டு; மேலும் இந்து எவரும் இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, அத்தகைய நுழைவு அல்லது வழிபாட்டின் காரணமாக மட்டுமே, ஏதேனும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தவறு அல்லது குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படக்கூடாது அல்லது அதற்காக வழக்கிடப்படவோ அல்லது வழக்குத் தொடரப்படவோ கூடாது.

(2) மேற்சொன்ன வகைமுறையின் பொதுப்பாங்கிற்கு குந்தகமின்றி, (1) ஆம் உட்பிரிவால் வழங்கப்பட்ட உரிமையானது, பின்வரும் உரிமைகள் எவையேனுமிருப்பின், அவை பொதுவாக இந்துக்களால் அல்லது இந்துக்களில் ஏதேனும் ஒரு பிரிவினரால் அனுபவிக்கப்படுகின்ற அளவிற்கு இருக்கும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது;–

(a) அதன் எல்லைக்குள் அல்லது வெளியே அமைந்திருந்தாலும், கோயிலுக்குச் செல்லும் எந்தவொரு புனித குளம், கிணறு, நீரூற்று அல்லது நீர்வழித்தடத்திலும் குளிக்க அல்லது தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான உரிமை,;

(b) கோயிலுக்குள் நுழைய தேவையான மலை அல்லது குன்று அல்லது சாலை, தெரு அல்லது பாதை உள்ளிட்ட எந்தவொரு புனித இடத்தையும் கடந்து செல்லும் உரிமை.

4. கோயில்களில் ஒழுங்கு மற்றும் நடத்தையைப் பராமரிப்பதற்கும், சடங்குகள் மற்றும் விழாக்களை முறையாகச் செயல்படுத்துவதற்கும் ஒழுங்குமுறை விதிகளை உருவாக்க அறங்காவலர்களின் அதிகாரங்கள்.– ஒரு கோவிலின் பொறுப்பில் உள்ள அறங்காவலர் அல்லது பிற அலுவலர், இரண்டு மாநில அரசின் கட்டுப்பாட்டிற்கும், அவர்களால் இயற்றப்படக்கூடிய எந்தவொரு விதிகளுக்கும் உட்பட்டு, கோவிலில் ஒழுங்கு மற்றும் நடத்தையைப் பராமரிப்பதற்கும், கோவிலில் செய்யப்படும் மத வழிபாடுகள் மற்றும் சடங்குகளை முறையாகக் கடைப்பிடிப்பதற்கும் விதிமுறைகளை உருவாக்க அதிகாரம் பெற்றிருப்பார். ஆனால் அத்தகைய விதிமுறைகள் ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது பிரிவைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் எந்த இந்துவுக்கும் எதிராக எந்த வகையிலும் பாகுபாடு காட்டக்கூடாது.

5. உரிமை வழக்குகள், குற்றவியல் வழக்குகள் போன்றவற்றை தொடர்தல் மற்றும் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதி.– (1) இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ, எந்தவொரு கோயிலிலும் நுழைதல் அல்லது வழிபடுதல் தொடர்பாக, ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது பிரிவைச் சேர்ந்த இந்துவால் அத்தகைய நுழைவு அல்லது வழிபாடு என்ற ஒரே காரணத்திற்காக, சேதங்கள், தடை உத்தரவு அல்லது அறிவிப்பு அல்லது வேறு ஏதேனும் நிவாரணத்திற்காக வழக்குத் தொடரவோ, எந்தவொரு குற்றத்திற்கும் வழக்குத் தொடரவோ, மற்றும் 1926 ஆம் ஆண்டு மெட்ராஸ் இந்து சமய அறக்கட்டளைச் சட்டம் (மெட்ராஸ் சட்டம் II/1927), அல்லது வேறு எந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு விண்ணப்பமோ அல்லது பிற நடவடிக்கையோ தொடங்கப்படக்கூடாது.

(2) இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு தொடரப்பட்ட மேற்கூறிய தன்மை கொண்ட எந்தவொரு உரிமை வழக்கு, குற்றவியல் வழக்கு, விண்ணப்பம் அல்லது நடவடிக்கையும், அதன் பிறகு, மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் தொடரப்படக்கூடாது.

6. இந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, ஒரு இடம், கோயிலா இல்லையா என்பது குறித்து ஏதேனும் கேள்வி எழுந்தால், அந்தக் கேள்வி மாநில அரசுக்கு அனுப்பப்படும், அவர்களின் முடிவு இறுதியானது, எனினும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஒரு தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆணையும் மாநில அரசின் முடிவு தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் செயப்படுதல் வேண்டும்.

7. தண்டத்தொகைகள்.– எவரொருவரும்,–

(i) இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட எந்தவொரு உரிமையையும் ஒரு இந்து பயன்படுத்துவதைத் தடுக்கிறார் எனில், அல்லது

(ii) அத்தகைய உரிமையைப் பயன்படுத்துவதில் ஒரு இந்துவைத் துன்புறுத்துகிறார் அல்லது தடுகிறார் எனில்,

முதல் குற்றத்திற்கு நூறு ரூபாய் வரை அபராதமும், இரண்டாவது அல்லது அடுத்தடுத்த குற்றத்திற்கு ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனையும், ஐநூறு ரூபாய் வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படுதல் வேண்டும்.

7–A. 7 ஆம் பிரிவின் கீழ் குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.– 7 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய அனைத்து குற்றங்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கவை].

8. விதிகள்.– (1) பொதுவாக கோயில்கள் அல்லது எந்தவொரு கோயில் அல்லது கோயில்களின் வகைகளைப் பொறுத்தவரை இந்தச் சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக மாநில அரசு விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின் கீழ் செய்யப்பட்ட அனைத்து விதிகளும் புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்படும், மேலும் அத்தகைய வெளியீட்டின் மீது, இந்தச் சட்டத்தில் இயற்றப்பட்டது போல் நடைமுறைக்கு வரும்.

9. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.– இந்தச் சட்டத்தின் விதிகளைச் செயல்படுத்துவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால், மாநில அரசு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அந்த இடர்பாடுகளை நீக்குவதற்குத் தேவையான எதையும் ஆணையின் வாயிலாக செய்யலாம்.